பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 04 2024 **WEDNESDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தல் நேர்மையாகவும், அமைதியாகவும் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

2. தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் மகளிர் நலனுக்காக எண்ணற்றத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக திமுக கூறியுள்ளது.

3. முந்தைய ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை திமுக அரசு நிறுத்தியுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. மத்திய அரசின் சாதனைகளை முன்நிறுத்தி தேசிய ஜனநாயக கூட்டணி பிரச்சாரத்தை மேற்கொள்வதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை மல்யுத்த சாம்பியன் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>>**

மக்களவைத் தேர்தல் நேர்மையாகவும், அமைதியாகவும் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார், மாநில அரசுகளின் உயரதிகாரிகளுடன் இன்று காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

தேர்தல் பணிகளை பொறுத்தவரை இந்த ஆலோசனைக்கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு ராஜீவ்குமார் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் மாநில அரசுகளின் தலைமைச்செயலர்கள், காவல்துறை தலைவர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் உட்பட உயரதிகாரிகள் பங்கேற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வித புகாருக்கும் இடமின்றி வாக்குப்பதிவு நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு ராஜீவ் குமார் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில், தமிழக அரசின் சார்பில், தலைமைச் செயலர் திரு சிவ்தாஸ் மீனா, தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ, காவல்துறை தலைவர் திரு சங்கர் ஜிவால் உட்பட பலர் பங்கேற்றனர்.

இதற்கிடையே, தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக, சி-விஜில் கைபேசி செயலி மூலம், இதுவரை 2 ஆயிரத்து 193 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக சென்னையில் மட்டும் 239 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

இந்நிலையில், தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

கோவையில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற இருசக்கர வாகன பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மதுரை மாவட்டத்தில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வருவாய்த்துறையினர் வீடுவீடாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

திமுக, அஇஅதிமுக, பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சித்தலைவர்களும், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிர்வாகிகளும் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மகளிர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தியுள்ளதாக அக்கட்சியின் நிர்வாகிகளில் ஒருவரான திரு அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், எட்டு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சேலத்தில் கட்சி நிர்வாகிகள் இடையே உரையாற்றிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, தமது ஆட்சி காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை திமுக அரசு நிறுத்தி வைத்துள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மகளிர் உரிமைத்தொகை முழுமையாக வழங்கப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை, கோவையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், மத்திய அரசின் சாதனைகளை முன்வைத்து தேசிய ஜனநாயக கூட்டணி பிரச்சாரத்தை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இந்தி எதிர்ப்பு பிரச்சாரத்தை திமுக அரசியலுக்காக பயன்படுத்துவதாக அவர் குறை கூறினார்.

அரசியல் பிரச்சாரத்தில் தனிநபர் தாக்குதல் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் திரு அண்ணாமலை கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

இனி தேர்தல் களம்,

தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதி

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க முன்வர வேண்டும் என்று வலியுறுத்தி, துணை ராணுவப்படையினர் பங்கேற்ற கொடி அணிவகுப்பு பேரணி இன்று நடைபெற்றது.

--------------

ராமநாதபுரம் மாவட்டத்தில் வாக்குச்சாவடி மையங்களை ஆட்சியர் திரு விஷ் ணுசந்திரன் இன்று ஆய்வு செய்தார்.

------------------

பெரம்பலூர் மாவட்டத்தில் காவல்துறையினர் மற்றும் துணை ராணுவப்படையினர் பங்கேற்ற கொடி அணிவகுப்பு பேரணியை ஆட்சியர் திருமதி கற்பகம் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையிலான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி ஆணையாளர் திருமதி அழகு மீனா தலைமையில் நடைபெற்றது.

------------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் 3 ஆயிரம் மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆட்சியர் திருமதி சரயூ தொடங்கிவைத்தார்.

-------------------

விழுப்புரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு பேரணி மற்றும் கையெழுத்து இயக்கத்தை ஆட்சியர் திரு பழனி தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக்கோப்பை மல்யுத்த சாம்பியன் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் **Udit, Akash, Rohit** உட்பட 10 பேரும், மகளிர் பிரிவில் **Anju, Shivani** உட்பட பத்து பேரும் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, கஜகஸ்தானின் **Bishkek** –யில் வரும் 11-ஆம் தேதி தொடங்கி 16-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது

-----------------

கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anmol Kharb** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 22-20 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Malvika Bansod**-ஐ வென்றார்.

-----------------

ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டிக்கான சர்வதேச பயிற்சியை மேற்கொள்வதற்காக இந்தியாவின் **Nikhat Zareen, Lovlina Borgohain, Parveen Hooda** மற்றும் **Preeti Pawar** துருக்கி செல்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

---------------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>>>